**செய்தி வெளியீடு எண்: 644** **நாள்:27.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 26.9.2019 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சிறப்பு மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 8 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டடங்களையும் திறந்து வைத்து, "எனது மருத்துவமனை – எனது பெருமை" என்ற திட்டத்தின் மூலம் 4 ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் தங்குதடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகள் நிறுவுதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை தோற்றுவித்தல், எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிகளிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், மருத்துவத் துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சிறப்பு மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இப்புதிய மையத்தில் 200 படுக்கை வசதிகள், ஒரே நேரத்தில் ஆறு அறுவை சிகிச்சைகள் செய்யும் வகையில் அதிநவீன வசதிகளுடன் கூடிய நான்கு

அறுவை அரங்குகள், செயற்கை சுவாச கருவி வசதிகளுடன் கூடிய 62 படுக்கைகள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவர்கள் குடியிருப்பு; கடலூர் மாவட்டம், விருதாச்சலம் அரசு மருத்துவமனையில் 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய கண் சிகிச்சை பிரிவுக் கட்டடம் மற்றும் வேலூர் மாவட்டம், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை அரங்குடன் கூடிய கண் கிகிச்சை பிரிவுக் கட்டடம்;

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பில், திருப்பூர் மாவட்டம் – பொன்னாபுரத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மற்றும் உப்பிலிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம்; திருவண்ணாமலை மாவட்டம் – ஆதமங்கலம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் வேலூர் மாவட்டம் – பேராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேறுகாலத்திற்கு முந்தைய கவனிப்பு பிரிவுக் கட்டடம்;

என மொத்தம், 26 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அரசு மருத்துவமனைகளின் சேவையை மேலும் மேம்படுத்தும் வகையில், ஆர்வமுள்ள தொழில் நிறுவனங்களின் சமூக பங்களிப்புடன் “எனது மருத்துவமனை – எனது பெருமை” (My Hospital – My Pride) என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 17.7.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதத்தில், அசோக் லேலண்டு நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கேளமங்கலம் வட்டாரம்–நாகமங்கலம் மற்றும் யுனிசெட்டி, தளி வட்டாரம் – உரிகம் மற்றும் அஞ்செட்டி ஆகிய நான்கு ஆரம்ப சுகாதார

நிலையங்களை சுமார் 50 லட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பு செய்து, வண்ணம் தீட்டவும், இந்த நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 60 லட்சம் ரூபாய் செலவில் 4 ஆம்புலன்ஸ் வாகனங்களை வழங்கவும் முன்வந்துள்ளது. இந்த ஆம்புலன்ஸ் வாகனங்கள் 108 அவசரகால ஊர்தி சேவை திட்டத்தில் இணைக்கப்பட்டு செயல்படும்.

அசோக் லேலண்டு நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநரிடம் “எனது மருத்துவமனை – எனது பெருமை” என்ற திட்டத்தின் மூலம் வழங்கியுள்ள நான்கு ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தேசிய தர உறுதித் திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சுகாதார சேவைகள், சுகாதார குறியீடு, முறையான பராமரிப்பு மற்றும் அங்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து நோயாளிகளின் கருத்துக்கள் ஆகியவற்றை தேசிய தர குழு நிபுணர்கள் ஆய்வு செய்து, தேர்ந்தெடுக்கப்படும் அரசு மருத்துவமனைகளுக்கு, மத்திய அரசு, பரிசுத் தொகையும், தேசிய தரச் சான்றிதழும் வழங்கி பாராட்டி வருகிறது. இந்த பரிசுத் தொகை தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

அந்த வகையில், மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் தேசிய தர உறுதித் திட்டத்தில் 2018–19ஆம் ஆண்டிற்கு கடலூர் மற்றும் நாமக்கல் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய தரச் சான்றிதழுடன் 29 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடலூர் மாவட்டம்–ஆவட்டி ஆரம்ப சுகாதார நிலையம், தருமபுரி மாவட்டம்–பெல்ராம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், புதுக்கோட்டை மாவட்டம்–கொடும்பலூர் ஆரம்ப சுகாதார நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம்–மறைமலைநகர் ஆரம்ப சுகாதார நிலையம், மதுரை மாவட்டம்–பாலமேடு ஆரம்ப சுகாதார நிலையம், திருவள்ளூர் மாவட்டம்–சோராஞ்சேரி ஆரம்ப சுகாதார நிலையம், சேலம் மாவட்டம்–தும்பல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம்–வி.காலியாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம், விழுப்புரம் மாவட்டம்–எடுத்தவாய்நத்தம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கண்டமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய 10 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய தரச் சான்றிதழ்களுடன் 28 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் வழங்கப்பட்ட தேசிய தரச் சான்றிதழ்களையும், காசோலைகளையும், கடலூர் மற்றும் நாமக்கல் மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர்கள், கடலூர், தருமபுரி, புதுக்கோட்டை, செங்கல்பட்டு, மதுரை, பூந்தமல்லி, சேலம், கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் சுகாதார மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்கள் ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் கே. செந்தில் ராஜ், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் ஆர். நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் டி. எஸ். சுவாதி ரத்தினவதி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, அசோக் லேலண்டு நிறுவனத்தின் தலைவர் திரு. என்.வி. பாலச்சந்தர், துணைத் தலைவர் திரு. டி. சசிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**